# ஜூலை மாதம் விண்ணில் பாய்வதற்காக ‘சந்திரயான்-3’ விண்கலம் ஸ்ரீஹரிகோட்டா வருகை



**சென்னை**: நிலவை ஆராய்வதற்காக வரும் ஜூலை மாதம் விண்ணில் செலுத்தப்பட உள்ள சந்திரயான்-3 விண்கலம், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்யும் நோக்கில் சந்திரயான்-2 விண்கலத்தை, ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் கடந்த 2019 ஜூலை 22-ம் தேதிவிண்ணில் செலுத்தியது. இந்த விண்கலம் 2019 செப்டம்பரில் நிலவின் சுற்றுப்பாதையை சென்றடைந்தது. எனினும், எதிர்பாராத தொழில்நுட்ப கோளாறு காரணமாக, திட்டமிட்டபடி ‘லேண்டர்’ கலன் தரையிறங்காமல், நிலவில் மோதி செயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியான ‘ஆர்பிட்டர்’, நிலவின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில், ரூ.615 கோடியில் சந்திரயான்-3 திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ முடிவு செய்தது. ஏற்கெனவே, நிலவை ஆர்பிட்டர் சுற்றிவருவதால் இந்த முறை லேண்டர், ரோவர் கலன்களை மட்டும் அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளது. வடிவமைப்பு பணிகள், சோதனை ஓட்டங்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில், ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலமாக சந்திரயான்-3 விண்கலம் வரும் ஜூலை மாதம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே, விண்ணில் செலுத்துவதற்கான முன்கட்டப் பணிகளுக்காக ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்துக்கு சந்திரயான்-3 விண்கலம் சிலநாட்களுக்கு முன்பு கொண்டு வரப்பட்டது. இதை ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட்டில் பொருத்தும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன. இறுதிகட்ட சோதனைகளுக்கு பிறகு, ஏவுதளத்துக்கு ராக்கெட் கொண்டு செல்லப்படும். சந்திரயான்-2 போல அல்லாமல், 42 நாட்களில் லேண்டர் கலனை நிலவில் தரையிறக்க இஸ்ரோ திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நகரங்களை புதுமைப்படுத்த முதலீடுகளை ஈர்க்கும் 2.0 திட்டம்: மத்திய அமைச்சரவை ஒப்புதல்




**புதுடெல்லி:** பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், CITIIS 2.0 என்னும் நகரங்களைப் புதுமைப்படுத்தவும், ஒருங்கிணைக்கவும், நிலைநிறுத்தவும் மேற்கொள்ளப்படும் நகர முதலீடுகள் 2.0 திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

CITIIS 2.0 என்பது பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம் (ஏஎப்டி) , மறுகட்டமைப்புக்கான கடன் நிறுவனம் (கேஎப்டபிள்யு), ஐரோப்பிய ஒன்றியம் (இயு), தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் (என்ஐயுஏ) ஆகியவற்றுடன் இணைந்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால், உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இந்தத் திட்டம் நான்கு ஆண்டுகளுக்கு, அதாவது 2023 முதல் 2027ம் ஆண்டு வரை செயல்படுத்தப்படும்.

நகர அளவில் ஒருங்கிணைந்த கழிவு மேலாண்மை, மாநில அளவில் பருவநிலை சார்ந்த சீர்திருத்த நடவடிக்கைகள், தேசிய அளவில் நிறுவனங்களை வலுப்படுத்துதல் மற்றும் அறிவைப் பரப்புதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் சுழற்சி பொருளாதாரத்தை மேம்படுத்தும் போட்டித் திட்டங்களுக்கு இந்தத் திட்டம் ஆதரவளிக்கும்.

CITIIS 2.0- க்கான நிதியில், ரூ.1,760 கோடி கடன் (200 மில்லியன் யூரோ- ஏஎப்டி, கேஎப்டபிள்யு ஆகியவை தலா 100 மில்லியன் யூரோ), ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் ரூ.106 கோடி ( 12 மில்லியன் யூரோ) தொழில்நுட்ப உதவி மானியம் ஆகியவை அடங்கும்.

CITIIS 1.0-இன் அனுபவம், வெற்றிகளை மேம்படுத்துவதையும் அளவிடுவதையும் CITIIS 2.0 நோக்கமாகக் கொண்டுள்ளது. CITIIS 1.0 வின் மொத்தச் செலவு ரூ. 933 கோடி (106 மில்லியன் யூரோ) என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்தில் 6.12 கோடி வாக்காளர்கள்: தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தகவல்



**சென்னை**: தமிழகத்தில் ஏப்ரல் மாதம் வரையிலான காலாண்டுக்கான வாக்காளர் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. புதிதாக சேர்க்கப்பட்ட 1.23 லட்சம் வாக்காளர்களுடன், மொத்தம் 6.12 கோடி வாக்காளர்கள் உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: இந்திய தேர்தல் ஆணையம், ஆண்டுதோறும் ஜனவரி 1 மட்டுமின்றி, ஏப்ரல் 1, ஜூலை 1 மற்றும் அக்டோபர் 1 ஆகிய நாட்களில், தகுதியான இளைஞர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க அறிவுறுத்தியுள்ளது.

இனி ஆண்டுதோறும் ஒவ்வொரு காலாண்டிலும் வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கப்படும். 18 வயது நிறைவடைந்த இளைஞர்கள், பதிவு செய்து கொள்ளலாம். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்த பின், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்படும்.

அந்த அடிப்படையில், வரும் ஏப்ரல் 1-ம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, வாக்காளர் திருத்தப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் புதிதாக 1,23,064 வாக்காளர்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 51,295 வாக்காளர்கள் முகவரி மாற்றம் செய்துள்ளனர். 9,11,820 வாக்காளர்களின் பெயர்கள் இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டைப் பதிவு ஆகிய காரணங்களுக்காக நீக்கப்பட்டுள்ளன. மேலும், 2,60,103 வாக்காளர்களின் பதிவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல்படி, தமிழகத்தில் 3,01,18,904 ஆண்கள், 3,11,09,813 பெண்கள், 7979 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 6,12,36,696 வாக்காளர்கள் உள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டத்துக்கு உட்பட்ட சோழிங்கநல்லூர் தொகுதியில் அதிகபட்சமாக 6,51,077 வாக்காளர்கள் உள்ளனர். அடுத்ததாக கோவை மாவட்டம் கவுண்டம்பாளையம் தொகுதியில் 4,54,919 வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்திலேயே குறைந்த வாக்காளர்கள் கொண்டது சென்னை மாவட்டத்தில் உள்ள துறைமுகம் தொகுதியாகும் இதில் 1,69,292 வாக்காளர்கள் உள்ளனர். அதேபோல, நாகை மாவட்டம் கீழ்வேளூர் தொகுதியில் 1,69,750 வாக்காளர்கள் உள்ளனர்.

மேலும், வாக்காளர் பட்டியலில் 3,400 வெளிநாடு வாழ் வாக்காளர்களும், 4,34,583 மாற்றுத் திறனாளி வாக்காளர்களும் உள்ளனர். 18 முதல் 19 வயது வரையிலான வாக்காளர்களின் எண்ணிக்கை 8,80,612 ஆகும். வாக்காளர் பட்டியலை தலைமை தேர்தல் அதிகாரியின் 'https://elections.tn.gov.in/' என்ற வலைதளத்தில் காணலாம். அதில் தங்கள் பெயரை சரிபார்த்துக் கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த நடைமுறைகள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. கடந்த ஏப்.1-ம் தேதி வரை 18 வயது நிறைவடைந்த தகுதியானவர்கள், தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க விண்ணப்பிக்கலாம்.

வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6-ஐ சமர்ப்பித்து, விண்ணப்பிக்கலாம். இதுதவிர 'https://voters.eci.gov.in/' என்ற இணையதளம் மூலமும், கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து "Voter Helpline App" என்ற செயலியை பதிவிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம்.

வாக்காளர் பட்டியல் நகலை புகைப்படம் இல்லாமல், வாக்காளர் பதிவு அலுவலரிடம் இருந்து சட்டப்பேரவைத் தொகுதிக்கு ரூ.100 கட்டணம் செலுத்தி பெறலாம்.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தல்படி, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, மாவட்ட தொடர்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் மாவட்ட தொடர்பு மையங்களை "1950" என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு, தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் 1800-4252-1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன், மாநில தொடர்பு மையம் இயங்கி வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 5-ம் தேதி நிலவரப்படி தமிழகத்தில் 3,04,89,866 ஆண்கள், 3,15,43,288 பெண்கள் மற்றும் 8,027 மூன்றாம் பாலினத்தவர் என 6,20,41,179 வாக்காளர்கள் இருந்தனர்.

தமிழகத்தில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலைவிட, தற்போது 8.04 லட்சம் வாக்காளர்கள் குறைந்துள்ளனர்.

## மீண்டும் உலகின் நம்பர் 1 பணக்காரர் ஆனார் எலான் மஸ்க்



**நியூயார்க்:** மீண்டும் உலகின் நம்பர் 1 பணக்காரர் ஆகியுள்ளார் டெஸ்லா மற்றும் ட்விட்டர் நிறுவன சிஇஓ எலான் மஸ்க். இதன் மூலம் பெர்னார்ட் அர்னால்ட்டை அவர் முந்தியுள்ளார். பெர்னார்ட் அர்னால்ட்டின் எல்விஎம்ஹெச் பங்குகளின் சந்தை மதிப்பு சரிந்த காரணத்தால் முதல் இடத்திற்கு மஸ்க் முந்தியுள்ளார்.

எல்விஎம்ஹெச் பங்கின் மதிப்பில் சுமார் 2.6 சதவீதம் என்ற எண்ணிக்கையில் நேற்று (புதன்கிழமை) சரிந்துள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் முதல் சுமார் 10 சதவீதம் அந்நிறுவனத்தின் பங்குகளின் சந்தை மதிப்பு வீழ்ச்சி பெற்றுள்ளதாகவும் தகவல். 74 வயதான பெர்னார்ட் அர்னால்ட்டின் சொத்து மதிப்பில் ஒரே நாளில் சுமார் 11 பில்லியன் டாலர்களை இழந்துள்ளார்.

தற்போது ப்ளூம்பெர்க் நிகழ் நேர உலக பணக்காரர்கள் பட்டியலில் 192 பில்லியன் டாலர்களுடன் முதல் இடத்தில் உள்ளார் மஸ்க். இரண்டாம் இடத்தில் உள்ள பெர்னார்ட் அர்னால்ட், 187 பில்லியன் டாலர்களை தனது சொத்து மதிப்பாக கொண்டுள்ளார். கடந்த 2022 டிசம்பரில் உலக பணக்காரர்கள் பட்டியலில் மஸ்கை முந்தினார் பெர்னார்ட் அர்னால்ட். அப்போது டெஸ்லா நிறுவன பங்குகளின் மதிப்பு சரிவை சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு மஸ்க், ட்விட்டர் தளத்தை 44 பில்லியன் டாலர்களுக்கு வாங்கி இருந்தார். அந்த நிறுவனத்தில் அவரது முழு கவனமும் இருந்து வருகிறது. அதனால் டெஸ்லா நிறுவன முதலீட்டாளர்கள் கவலை கொண்டனர். அதன் விளைவாக பங்குகளின் விலை வீழ்ச்சி கண்டது. இருந்தும் நடப்பு ஆண்டில் டெஸ்லா பங்குகளின் விலை ஏற்றம் கண்டது. மஸ்க், ஸ்பேஸ்எக்ஸ் மற்றும் நியூராலிங்க் போன்ற நிறுவனங்களையும் கைவசம் வைத்துள்ளார்.

## மணிப்பூர் வன்முறை | உயர் நீதிமன்ற ஓய்வு நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு: அமித் ஷா அறிவிப்பு

**இம்பால்:** பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பாக மணிப்பூரில் இருவேறு இனக் குழுவினருக்கு இடையே நடைபெற்ற போராட்டம் வன்முறையாக மாறி அந்த மாநிலத்தை ஸ்தம்பிக்க செய்துள்ள நிலையில் வன்முறை தொடர்பாக உயர் நீதிமன்ற ஓய்வு நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்படும் என்று மத்திய உள் துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

மணிப்பூரில் மேய்தி, குக்கி சமூகத்தினரை தவிர, தமிழர்கள், நேபாளர்கள், ராஜஸ்தானியர்கள், வங்காளிகள், பஞ்சாபியர்கள் உள்ளிட்ட பலர் எல்லை நகரத்தில் பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். இந்நிலையில் அங்கு, கடந்த மே 3-ம் தேதி தொடங்கிய இனக்கலவரத்திற்குப் பிறகு, ஆயிரக்கணக்கானோர் எல்லை நகரத்தை விட்டு வெளியேறி மியான்மர் உட்பட பல பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதுவரை பல்வேறு இடங்களில் நிகழ்ந்த வன்முறை சம்பவங்களில் 80 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 300-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், கடந்த மூன்று நாட்களாக வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆய்வுகளை மேற்கொண்டார். தனது மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்ட அமித் ஷா இன்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அமைச்சர் அமித் ஷா கூறியதாவது:

மணிப்பூரில் கடந்த மூன்று நாட்களாக பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட குக்கி, மேய்தி இனக் குழுக்களின் பிரதிநிதிகளை சந்தித்தேன். அத்துடன் அரசு அதிகாரிகள், அரசியல் கட்சியினர் ஆகியோரை சந்தித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

மணிப்பூர் இனக்கலவரம் தொடர்பாக விசாரிக்க உயர் நீதிமன்ற ஓய்வு நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்படும். வன்முறை தொடர்பான 6 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை சிபிஐ விசாரிக்கும். இந்த விசாரணை நடுநிலையாக இருக்கும். வன்முறையின் பின்னணியை விசாரணை அமைப்பு வேரோடு அலசி ஆராயும் என்று நான் உறுதியளிக்கிறேன்.

மேலும் மாநிலத்தில் அமைதியை நிலைநாட்ட ஆளுநர் வழிகாட்டுதலின்படி செயல்படக் கூடிய அமைதிக் குழு ஒன்று அமைக்கப்படும்.

இன்று (வியாழக்கிழமை) முதல் மாநிலத்தில் ஒருங்கிணைந்த கமாண்ட் செயல்படும். இது மணிப்பூர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பல்வேறு படைப் பிரிவுகளையும் ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்யும். இதனை ஓய்வு பெற்ற சிஆர்பிஎஃப் இயக்குநர் ஜெனரல் குல்தீப் சிங் தலைமையேற்று நடத்துவார்.

மணிப்பூர் கலவரத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் அளிக்கப்படும். இதில் ரூ.5 லட்சம் மாநில பங்களிப்பாகவும், ரூ.5 லட்சம் மத்திய பங்களிப்பாகவும் இருக்கும்.

மணிப்பூரில் எதிர்காலத்தில் இதுபோன்ற வன்முறைகள் நிகழாத வண்ணம் உறுதி செய்யும்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

இவ்வாறு அமித் ஷா கூறினா

## "இது வெற்றிகரமான பயணம்; ரூ.3,000 கோடி முதலீடுகளுக்கு வாய்ப்பு" - சென்னை திரும்பிய முதல்வர் ஸ்டாலின் தகவல்



**சென்னை**: சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றிரவு (மே 31) இரவு சென்னை திரும்பினார்.

அப்போது சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், "உங்கள் வாழ்த்துகளோடு நான் மேற்கொண்ட சிங்கப்பூர் - ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமைந்தது. தமிழ்நாட்டிற்கும் ஜப்பானுக்கும், கடந்த சில ஆண்டுகளில் பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் நல்லுறவை பெறக்கூடிய வகையில் இந்தப் பயணம் அமைந்தது. குறிப்பாக, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட மிகப்பெரிய திட்டங்களான மெட்ரோ ரயில் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் போன்றவற்றை செயல்படுத்தியிருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் ஜப்பானின் பங்கும் அதில் இருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

உற்பத்தித் துறையில் உலகிற்கே முன்னோடியாக விளங்குவது ஜப்பான் நாடு. அதே நேரத்தில் ஆசியாவின் மிகப்பெரும் உற்பத்தி தொழில் மையமாக தமிழ்நாடு உருவெடுக்க வேண்டும் என்பது தான் திமுக அரசின் குறிக்கோள். இதற்காக தொழில் முதலீடுகளை ஈர்த்திடக்கூடிய வகையில் தொழில்துறை

அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு ஏற்கனவே ஜப்பான் நாட்டிற்குச் சென்று ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினார். குறைந்தபட்சம் 3000 கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்திட வேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்டோம்.

அந்த வகையில், பல ஜப்பான் நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தைகளை நடத்தி, 'ஹை-பி நிறுவனம் - 312 கோடி ரூபாய், டைசெல் நிறுவனம் - 83 கோடி ரூபாய், கியோகுட்டோ நிறுவனம் - 113.9 கோடி ரூபாய், மிட்சுபா இந்தியா - 155 கோடி ரூபாய், பாலிஹோஸ் டோஃபில் - 150 கோடி ரூபாய், பாலிஹோஸ் கோஹ்யேய் - 200 கோடி ரூபாய், பாலிஹோஸ் சட்டோ-ஷோஜி - 200 கோடி ரூபாய், ஓம்ரான் ஹெல்த்கேர் - 128 கோடி ரூபாய்' என மொத்தம் 3,233 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக, நேரடியாகவும் மறைமுகமாகவும் 5000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமல்லாமல், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கும் தொழிற்கல்வி வளர்ச்சிக்கும், உயர்கல்வித் திறன் பயிற்சிக்கும் தேவையான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பல்வேறு துறைகளுடைய பல முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் அடுத்தகட்ட தொழில் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இந்த தொழிற்சாலைகள் தூண்டுகோலாக இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். மேலும் சிங்கப்பூரிலும், ஜப்பானில் ஒஸாகா நகரத்திலும், டோக்கியோ நகரத்திலும் இருக்கக்கூடிய பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்களினுடைய தலைவர்களையெல்லாம் சந்தித்தேன். சிங்கப்பூர் நாட்டினுடைய சட்டம் மற்றும் உள்துறை அமைச்சரையும், தொழில் வர்த்தகத் துறை அமைச்சரையும் சந்தித்து தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு எதிர்கால திட்டங்கள் குறித்தும், இந்தியாவில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்பதையும் நான் எடுத்துரைத்திருக்கிறேன்.

இந்தச் சந்திப்பின்போது, மேலும் பல முதலீடுகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பல நிறுவனங்கள் மிகவும் முனைப்போடு இருப்பது எங்களுக்கு தெரியவந்தது.

மேலும் தொடர்ந்து முயற்சி செய்து, இந்த நிறுவனங்களின் தொழில் முதலீடுகளையும் தமிழ்நாட்டுக்கு ஈர்த்திட தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு தொழில்துறை அமைச்சரையும், தொழில்துறை அலுவலர்களையும் வலியுறுத்தியிருக்கிறேன். இதையொட்டி, வருகிற 2024-ஆம் ஆண்டு ஜனவரி 10, 11 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கக்கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கும் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறேன்.

இந்த அழைப்பினை ஏற்று பெரும் தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் பலரும் அதில் கலந்து கொள்வதாக உறுதி தந்திருக்கிறார்கள். இந்த மாநாட்டை சிறப்பாக நம்முடைய தமிழக அரசு நடத்த இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று பேசினார்.

## பிரம்மோஸ், சுகோய் எஸ்யு-30 கூட்டணியால் விமான படைக்கு அளப்பரிய திறன் வந்துள்ளது - தளபதி வி.ஆர்.சவுத்ரி பேட்டி



**புதுடெல்லி**: பிரம்மோஸ், சுகோய் எஸ்யு-30 கூட்டணி விமானப் படையை வலிமையாக்கும் என்று விமானப் படைத் தளபதி வி.ஆர்.சவுத்ரி கூறினார்.

டெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின்னர் செய்தி நிறுவனத்துக்கு விமானப் படைத் தளபதி வி.ஆர்.சவுத்ரி அளித்த பேட்டியில் கூறியதாவது: நமது விமானப் படையில் தற்போது பிரம்மோஸ் ஏவுகணைகள், சுகோய் எஸ்யு-30 ரக விமானங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த வகை ஏவுகணைகள், விமானங்கள் உண்மையில் நமக்கு அளப்பரிய திறனைக் கொடுத்துள்ளன. அவை நமது செயல்திறனை மேம்படுத்தியுள்ளன. தற்போது சுகோய் எஸ்யு-30 ரக விமானத்தில் பிரம்மோஸ் ஏவுகணைகள் பொருத்தப்பட்டு சோதிக்கப்பட்டு வருகின்றன.

இந்த பிரம்மோஸ், சுகோய் எஸ்யு-30 கூட்டணி நமது விமானப் படையை வலிமையாக்கி உள்ளது.

சிறிய வகையிலான அடுத்ததலைமுறை பிரம்மோஸ் ஏவுகணைகள் தற்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை வேறு சில போர் விமானங்களில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டு வருகின்றன.

துல்லியமாகத் தாக்கும் பிரம்மோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகள் வரும் ஆண்டுகளில் நமது செயல்திறனை மேம்படுத்தும்.

சுகோய் விமானங்கள், பிரம்மோஸ் ஏவுகணை நமது விமானப் படையின் வலிமையை வெகுவாக உயர்த்தியுள்ளது. கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் வடக்கு எல்லைகளில் நிலைமை மோசமாக இருந்தது. எனவே, அதுபோன்ற நிலப்பகுதியில் நடத்தப்படும் தாக்குதல்களுக்கு இந்த வகை ஆயுதங்களை நாம் திறம்பட பயன்படுத்த முடியும் என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

புதிய வகை பிரம்மோஸ் ஏவுகணைகளை மிக்-29, மிராஜ் 2000, எல்சிஏ (இலகு ரக போர் விமானங்கள்) விமானங்களில் எதிர்காலத்தில் பயன்படுத்த முடிவு செய்துள்ளோம். இவ்வாறு வி.ஆர். சவுத்ரி கூறினார்.

## 112 வயது திம்மக்காவுக்கு கேபினட் அமைச்சர் அந்தஸ்து: கர்நாடக முதல்வர் உத்தரவு



**பெங்களூரு**: கர்நாடக மாநிலம் துமக்கூருவை அடுத்துள்ள கூதூர் கிராமத்தை சேர்ந்தவர் சாலுமரத திம்மக்கா (112). இவர் தனக்கு பிள்ளைகள் இல்லாததால் கூதூர் கிராமத்தில் 90 ஆண்டுகளுக்கு முன் சாலைஓரத்தில் ஆலமரக் கன்றுகளை நட்டார். பிறகு இவற்றை பிள்ளைகளை போல பத்திரமாக வளர்த்தார். இவ்வாறு 385 ஆலமரங்களை வளர்த்த திம்மக்காவுக்கு கடந்த 2019-ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஆண்டு திம்மக்காவின் பிறந்தநாளின் போது அவருக்கு, கர்நாடக முதல்வராக இருந்த பசவராஜ் பொம்மை கேபினட் அமைச்சர் அந்தஸ்து வழங்கி உத்தரவிட்டார். அதன்படி அவருக்கு அரசின் கார், ஓட்டுநர், வீடு, அமைச்சருக்கு இணையான ஊதியம், 2 உதவியாளர்கள் உள்ளிட்ட வசதிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் கர்நாடகாவின் புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள சித்தராமையாவை சாலுமரத திம்மக்கா நேற்று முன்தினம் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது சித்தராமையா, “எனது ஆட்சியிலும் உங்களுக்கு கேபினட் அமைச்சர் அந்தஸ்து தொடர்ந்து வழங்கப்படும்” என்று கூறினார். இதையடுத்து இதற்கான உத்தரவை அவர் பிறப்பித்தார்.

இந்நிலையில் கர்நாடகாவின் சுற்றுச்சூழல் தூதுவராகவும் திம்மக்காவை நியமித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## ஜெர்மனியில் நடக்கும் சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வான தேவகோட்டை மாற்றுத்திறனாளி மாணவி



**காரைக்குடி:** ஜெர்மனியில் நடக்கும் சிறப்பு ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தேவகோட்டை மாற்றுத்திறனாளி மாணவி தேர்வாகியுள்ளார்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகேயுள்ள கண்ணங்கோட்டையைச் சேர்ந்த தம்பதி காளிமுத்து - மாரி ஆகியோரது மகள் வானதி (17). மாற்றுத்திறனாளியான இவர், காரைக்குடி அருகேயுள்ள அமராவதி புதூர் நிர்மல் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு பள்ளியில் படித்து வருகிறார்.

இந்நிலையில் சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியா சார்பில் தமிழகத்தில் இருந்து வானதி உட்பட 16 பேர் தேர்வு செய்யப் பட்டனர். மேலும் தடகளப் போட் டிக்கு பெண்கள் பிரிவில் இந்திய அளவில் தேர்வான நான்கு பேரில் வானதியும் ஒருவர்.

சிறப்பு ஒலிம் பிக் போட்டி ஜெர்மனி நாட்டில் ஜூன் 17 முதல் ஜூன் 24-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் 117 நாடுகளைச் சேர்ந்த 7,000-க்கும்

மேற்பட்டோர் பங்கேற்கின்றனர். இதில் வானதி இந்தியா சார்பில் தடகளப் பிரிவில் 400 மீ. ஓட்டம் தொடர் ஓட்டத்தில் பங்கேற்கிறார்.

மாணவி வானதியை சிறப்பு பள்ளி தாளாளர் ரெஜினா, பாதிரியார் வின்சென்ட், பயிற்சியாளர் கார்த்திக் உள்ளிட்டோர் பாராட்டினர்.

பயிற்சியாளர் கார்த்திக் கூறுகை யில், சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்கு ஓராண்டாக தேர்வு போட்டிகள் நடைபெற்றன. தொடர்ந்து தேசிய அளவில் குஜராத் மாநிலத்தில் 2 பயிற்சி முகாம்கள், புதுடெல்லியில் ஒரு பயிற்சி முகாமை நடத்தி வீரர்களை தேர்வு செய்தனர் என்று கூறினர்.

## அகில இந்திய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வென்று சாதித்த கோவை மாணவி




**கோவை:** புதுடில்லியில் நடந்த அகில இந்திய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில், கோவையைச் சேர்ந்த இளம் பெண் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். டெல்லியில் 'கேலோஇந்தியா' பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் என்ற தலைப்பில், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கான தடகளப் போட்டிகள், கைப்பந்து, கூடைப்பந்து, துப்பாக்கி சுடுதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் கடந்த மாதம் 25-ம் தேதி முதல் நடந்து வருகின்றன.

துப்பாக்கி சுடும் போட்டியில் கோவை பிஎஸ்ஜ ஆர் கிருஷ்ணம்மாள் கல்லூரியில் எம்.பி.ஏ முதலாம் ஆண்டு படித்துவரும் மாணவியும், துப்பாக்கி சுடுதல் போட்டியில் சிறப்புப் பயிற்சி பெற்ற வீராங்கனையுமான நிவேதிதா வி.நாயர் (21) கலந்து கொண்டார்.

20 மீட்டர் ஸ்போர்ட்ஸ் பிஸ்டல் பிரிவில் நடந்த போட்டியில் 20 பேர் கலந்து கொண்டனர். இதில் நிவேதிதா வி.நாயர் 2-வது இடம் பிடித்து, வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். 20 மீட்டர் ஸ்போர்ட்ஸ் பிஸ்டல் பிரிவில் சிறந்த வீராங்கனையான இவர், கடந்த 2017-ம் ஆண்டு முதல் துப்பாக்கி சுடும் போட்டிகளில் கலந்து கொண்டு வருகிறார்.

கோவை காவலர் பயிற்சிப் பள்ளி வளாகத்தில் உள்ள, ரைபிள் கிளப்பில் இவர் பயிற்சி பெற்று வருகிறார். மாணவி நிவேதிதா வி.நாயருக்கு பயிற்சியாளராக அவரது தந்தை சரவணன் உள்ளார். மகளுக்கு பயிற்சியை அளித்து, அவர் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற தொடர்ந்து ஊக்குவித்து வருகிறார்.

இதுகுறித்து சரவணன் கூறும்போது, ‘‘நான் என்.எஸ்.ஜி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றி உள்ளேன்.அதிலிருந்து வந்த பின்னர், எனது மகள் நிவேதிதா பி.நாயருக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி அளிக்கத் தொடங்கினேன். தினமும் 6 மணி நேரம் அவர் பயிற்சியில் ஈடுபடுவார்.

கத்தார் நாட்டில் நடந்த உலக சாம்பியன்ஷிப் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கம், பெருநாட்டில் நடந்த உலகளவிலான போட்டியில் பங்கேற்று வெள்ளிப் பதக்கம், ஜெர்மனியில் நடந்த ஜூனியர் வேர்ல்டு சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்று வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

மாநில அளவிலும், தேசிய அளவிலும் பல்வேறு போட்டிகளில் பங்கேற்று ஏராளமான பதக்கங்களை அவர் வென்றுள்ளார். துப்பாக்கி சுடுதலில் ஆர்வம் உள்ள அவர், நாட்டுக்கு பெருமை தேடித் தர பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை குவித்து வருகிறார்,’’ என்றார்.

## இந்திய மல்யுத்த வீராங்கனைகள் புகார் மீது பாரபட்சமற்ற விசாரணைக்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வலியுறுத்தல்



**லோசான்:** இந்திய மல்யுத்த வீராங்கனைகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மீது பாரபட்சமின்றி விசாரணை நடத்த வேண்டும் என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, "உள்நாட்டு சட்டத்துக்கு ஏற்ப இந்திய மல்யுத்த வீராங்கனைகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மீது பாரபட்சமின்றி விசாரணை நடத்த வேண்டும். இது தொடர்பான விசாரணை முதல் கட்டத்தில் உள்ளது என்பதை நாங்கள் அறிவோம். இது தொடர்ந்து அடுத்தடுத்த கட்டத்தை எட்ட வேண்டும். இந்த நடைமுறைகளின்போது மல்யுத்த வீராங்கனைகள் மற்றும் வீரர்களுக்கான பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அதேநேரத்தில், இந்த விசாரணை விரைந்து முடிக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

**ஐக்கிய உலக மல்யுத்த அமைப்பு எச்சரிக்கை:** "குற்றச்சாட்டுக்கு ஆளாகி உள்ள இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தலைவர் பிரிஜ் பூஷண் சரண் சிங்கிடம் முறையான விசாரணை நடத்த வலியுறுத்துகிறோம். கடந்த சில நாட்களாக மல்யுத்த வீராங்கனைகள், வீரர்கள் கையாளப்படும் விதம் கவலை அளிக்கிறது. தங்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் விதமாக பேரணி சென்ற அவர்களை போலீஸார் கைது செய்தது கவலை தருகிறது. ஒரு மாத காலத்திற்கும் மேலாக அவர்கள் போராடி வந்த இடமும் அதிகாரிகளால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி 45 நாட்கள் கெடுவுக்குள் இந்திய மல்யுத்த கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்படி இல்லையென்றால் கூட்டமைப்பை ஐக்கிய உலக மல்யுத்த கூட்டமைப்பு சஸ்பெண்ட் செய்யும். அதன் பின்னர் வீரர்கள் தனி கொடியின் கீழ் விளையாட அனுமதிக்கப்படுவார்கள்" என்று ஐக்கிய உலக மல்யுத்த கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

இந்த விவகாரத்தில், ஐக்கிய உலக மல்யுத்த அமைப்பு, இந்திய விளையாட்டு வீரர்கள் நீரஜ் சோப்ரா, அபினவ் பிந்த்ரா, அனில் கும்ப்ளே உள்ளிட்டோர் போராட்டம் மேற்கொண்டு வரும் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

**புகாரும் போராட்டமும்:** இந்திய மல்யுத்த சம்மேளன தலைவரும், பாஜக எம்.பி.யுமான பிரிஜ் பூஷண் சரண் சிங் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டது. இதனால் அவரை கைது செய்யக் கோரி ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற மல்யுத்த வீராங்கனைகள் சாக்சி மாலிக், வினேஷ்போகத், மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா ஆகியோர் கடந்த ஏப்ரல் 23-ம் தேதி முதல் போாரட்டம் நடத்தி வருகின்றனர். இவர்கள் கடந்த 28-ம் தேதி, புதிய நாடாளுமன்றம் நோக்கி பேரணி செல்ல முயன்றனர். இவர்களை போலீஸார் கைது செய்தனர்.

டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்துக்காக போடப்பட்ட கூடாரங்கள் எல்லாம் அகற்றப்பட்டன. இதையடுத்து தாங்கள் பெற்ற பதக்கங்களை கங்கையில் நேற்று மாலை 6 மணியளவில் வீசுவோம் என சாக்சி மாலிக், வினேஷ் போகத், பஜ்ரங் புனியா ஆகியோர் ட்விட்டரில் தகவல் தெரிவித்தனர். மேலும், "இந்த பதக்கங்கள்தான் எங்கள் வாழ்வு, ஆன்மா. இவற்றை கங்கையில் வீசியபின் உயிர் வாழ்வதில் அர்த்தம் இல்லை. நாங்கள் இந்தியா கேட் பகுதியில் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம்" என தெரிவித்தனர். போலீஸார் தங்களை குற்றவாளிகள் போல் நடத்துவதாகவும், ஆனால் பாலியல் தொந்தரவு

கொடுத்தவர் பொதுக் கூட்டங்களில் எங்களை தாக்கி பேசுகிறார் எனவும் அவர்கள் கூறினர்.

கங்கையில் பதக்கங்களை வீசும் முடிவு குறித்து ஹரித்துவார் எஸ்எஸ்பி அஜய் சிங் அளித்த பேட்டியில், “கங்கா தசராவை முன்னிட்டு ஹரித்துவாரில் புனித நீராட 15 லட்சம் பக்தர்கள் வந்துள்ளனர். இங்கு போராட்டத்தில் ஈடுபடும் மல்யுத்த வீரர்கள் வர விரும்பினால் தாராளமாக வரலாம். அவர்கள் கங்கையில் பதக்கங்களை வீசினால் நாங்கள் தடுக்க மாட்டோம். அவர்களை தடுக்க வேண்டும் என எங்களுக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை” என்றார்.

இதனிடையே, மல்யுத்த வீராங்கனைகள், தாங்கள் பெற்ற பதக்கங்களை கங்கையில் வீச திங்கள்கிழமை மாலை ஹரித்துவார் வந்தனர். கண்ணீருடன் கங்கைக் கரைக்கு சென்ற அவர்களை, உள்ளூர் மக்களும், விவசாய சங்கத்தினரும் சமாதானப்படுத்தினர். பல ஆண்டு கடின உழைப்புக்கு பின்வாங்கிய பதக்கங்களை கங்கையில் வீசினால், 2 ஒலிம்பிக் பதக்கங்களையும், காமன்வெல்த் மற்றும் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற பல பதக்கங்களையும் நாடு இழக்கவேண்டியிருக்கும். அதனால் பதக்கங்களை கங்கையில் வீச வேண்டாம் என கேட்டுக் கொண்டனர். இதையடுத்து பதக்கங்களை கங்கையில் வீசும் முடிவை மல்யுத்த வீராங்கனைகள் நிறுத்தினர். மல்யுத்த சம்மேளனத் தலைவர் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க அவர்கள் 5 நாள் கெடு விதித்துள்ளனர்.